# அரக்கோணம் நகராட்சி

## அவசர நகர மன்ற கூட்ட அறிவிப்பு

கூட்ட எண்.40 நாள்: 29.11.2025.

பொருள் : நகர மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள்: 02.12.2025 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு அவசர கூட்டம் நடைபெறுதல் – அறிவித்தல் – சம்மந்தமாக.

ooOoo

அரக்கோணம் நகராட்சி நகரமன்றம் அவசர கூட்டம் 02.12.2025 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் நகரமன்ற கூடத்தில், நகரமன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் அவசர கூட்டத்தில் நகரமன்ற துணை தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் அன்பார்ந்த

29.11.2025

நகரமன்ற தலைவர்
அரக்கோணம் நகராட்சி

இடம் : அரக்கோணம் நகராட்சி
நாள் : 29.11.2025.

# அரக்கோணம் நகராட்சி
# அவசரக்கூட்டம்

2025–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 02.12.2025–ம் நாள் செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு அரக்கோணம் நகராட்சியில் அலுவலக வளாகத்தில் உள்ள டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் நகரமன்ற கூட்டரங்கில் நகர மன்ற தலைவர் அவர்களால் நடத்தப்பட உள்ள அவசரக்கூட்ட நடவடிக்கைகள்.

| | |
|---|---|
| **திருக்குறள்:** | ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்<br>தேர்ந்துசெய் வஃதே முறை. |
| **விளக்கம்:** | எல்லாவற்றையும் நன்கு ஆராய்ந்து, யாவரிடமும் அன்பு காட்டாது நடுவு நிலைமையைப் பொருந்தி தொடைவிடையால் உசாவித் தெளிந்து செய்வதே நல்ல ஆட்சி முறையாகும். |

<u>பொருள் எண். 1</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை– 28 அவர்களின் கடித ந.க.எண்.29143/2025/H3 நாள்.05.11.202 மற்றும் நாள்.22.11.2025ன்படி மாண்புமிகு தழிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி தூய்மை பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு காலை உணவு இலவசமாக வழுங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து முதல் நிலை நகராட்சிகளுக்கு ஒரு நபருக்கான காலை உணவு ரூ.39 மற்றும் மொத்தமுள்ள தூய்மை பணியாளர்களுக்கான உணவு விநியோகத்திற்கான செலவினம் ரூ.23870/– இதிலிருந்து ஒரு தூய்மை பணியாளருக்கான செலவினம் ரூ.41.41 (GST 5% தவிர்த்து) அனுமதிக்கப்பட்டு, அரக்கோணம் நகராட்சியில் பணிபுரியும் 329 தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு வழுங்க ரூ,1.70 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு தழிழக முதலமைச்சர் தூய்மை பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தினை செயல்படுத்த வேண்டி 21.11.2025 அன்று **e–Tender** மூலம் ஒப்பந்தம் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில் நுட்ப ரீதியாக தகுதி பெறததால், 27.11.2025 அன்று குறுகிய கால மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பின்வருமாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

1) அண்ணபூர்ணா கேட்டரிங் சர்வீஸ், அரக்கோணம்
2) சாந்தி கேட்டர்ஸ், குடியாத்தம்

மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை தொழில் நுட்ப ரீதியாக ஆய்வு செய்யப்பட்டதில் அண்ணபூர்ணா கேட்டரிங் சர்வீஸ், அரக்கோணம் அவர்களின் தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி தகுதி பெற்றுள்ளது. மேற்படி ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளியினை 28.11.2025 அன்று திறக்கப்பட்டதில் விலை விகிதம் வின்வருமாறு.

| வ எண் | பணியின் விவரம் | ஒப்பந்ததாரர் | விலை விகிதம் நாள் ஒன்றுக்கு (ரூ) (GST 5% தவிர்த்து) |
|---|---|---|---|
| 1 | மாண்புமிகு தழிழக முதலமைச்சர் அவர்களின் தூய்மை பணியாளர்களுக்கான உணவு வழுங்கும் திட்டம் | அண்ணபூர்ணா கேட்டரிங் சர்வீஸ், அரக்கோணம் | 41.40 |

மேற்படி விலை விகிதத்தை ஏற்று திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி அண்ணபூர்ணா கேட்டரிங் சர்வீஸ், அரக்கோணம் அவர்களுக்கு பணி உத்திரவு வழுங்க நகர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.906/2025/இ1)

**<u>பொருள் எண். 2</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர். சென்னை அவர்களின் கடிதம் 13933/2022/எம்ஏ2, நாள்.24.11.2025ல் அரக்கோணம் நகராட்சிக்கு மாற்றுத்திறனாளி நகர மன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டுள்ள திரு.R.மணிகண்டன், என்பவரை படிவம் –2 (Form2 Nomination of Member)ல் நியமனம் செய்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட கடிதத்தினை தொடர்ந்து அரக்கோணம் நகராட்சியில் மாற்றுத்திறனாளி நகரமன்ற உறுப்பினர் திரு.R.மணிகண்டன், என்பவரை 26.11.2025 காலை 10.00 மணியளவில் நகராட்சி ஆணையர் முன்னிலையில் பதவியேற்பு செய்து வைக்கப்பட்டதன் அடிப்படையில் பதவியேற்பு உறுதிமொழி எடுத்துக்கொண்டார் என்ற விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

நகரமன்ற தலைவர்
அரக்கோணம் நகராட்சி

**<u>மன்றப்பொருள்</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர். சென்னை அவர்களின் கடிதம் 13933/2022/எம்ஏ2, நாள்.24.11.2025ல் அரக்கோணம் நகராட்சிக்கு மாற்றுத்திறனாளி நகர மன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டுள்ள திரு.R.மணிகண்டன், என்பவரை படிவம் –2 (Form2 Nomination of Member)ல் நியமனம் செய்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட கடிதத்தினை தொடர்ந்து அரக்கோணம் நகராட்சியில் மாற்றுத்திறனாளி நகரமன்ற உறுப்பினர் திரு.R.மணிகண்டன், என்பவரை 26.11.2025 காலை 10.00 மணியளவில் நகராட்சி ஆணையர் முன்னிலையில் பதவியேற்பு செய்து வைக்கப்பட்டதன் அடிப்படையில் பதவியேற்பு உறுதிமொழி எடுத்துக்கொண்டார் என்ற விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.699/2025/எப்1)

| | |
|---|---|
| ஆணையர்<br>அரக்கோணம் நகராட்சி | நகரமன்ற தலைவர்<br>அரக்கோணம் நகராட்சி |

**<u>பொருள் எண்.03</u>**

**<u>நகர மன்ற தலைவர் அவர்கள் கொண்டுவரும் இரங்கல் தீர்மானம்</u>**

1) அரக்கோணம் நகராட்சியில் முன்னால் நகரமன்ற உறுப்பினராக பதவி வகித்த திருமதி.R.ஜோதி, அவர்கள் 21.10.2025 அன்று இயற்கை எய்தியதை அடுத்து அவருடைய பிரிவால் வாடும் அவருடைய குடும்பத்தினருக்கு இந்நகரமன்றம் சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்ளப்படுகிறது.

2) அரக்கோணம் நகராட்சியில் முன்னால் நகரமன்ற உறுப்பினராக பதவி வகித்த திருமதி.R.மகேஸ்வரி, அவர்கள் 28.11.2025 அன்று இயற்கை எய்தியதை அடுத்து அவருடைய பிரிவால் வாடும் அவருடைய குடும்பத்தினருக்கு இந்நகரமன்றம் சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்ளப்படுகிறது.

**<u>பொருள் எண்.04</u>**

**<u>நகர மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரும் நன்றி தெரிவிக்கும் தீர்மானம்</u>**

1) அரக்கோணம் நகராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரியும் தற்காலிக மற்றும் நிரந்தர பணியாளர்கள் மற்றும் DBC பணியாளர்கள் என மொத்தம் 329 தூய்மை பணியாளர்களுக்கு ரூ.1.70 கோடி மதிப்பீட்டில் காலை உணவு வழங்குவதற்கான ஆணை வழங்கிய **மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு** இந்நகரமன்றத்தின் சார்பாக நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2) அரக்கோணம் நகராட்சிக்கு மாற்றுத்திறனாளி நகர மன்ற உறுப்பினரை தேர்வு செய்தமைக்கு **மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு** இந்நகரமன்றத்தின் சார்பாக நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நகரமன்ற தலைவர்
அரக்கோணம் நகராட்சி